
"If you take away our jobs, you will kill us faster than the HIV virus...
We can work. We pose no risk to our co-workers. Work is more than medicine to us. It keeps us going and enables us to bring home food and medicine."
Jahnabi Goswami
Living with HIV
INP+
INDIAN NETWORK FOR PEOPLE LIVING WITH HIV/AIDS
ILO
Prevention of HIV/AIDS in the World of Work: A Tripartite Response
– An ILO India Project supported by U. S. Department of Labor
International Labour Office, New Delhi
Translated and Reprinted by :

3

# எச்.ஐ.வி. தாக்கமும் அதன் நிர்வகிப்பும்







Vivakanandan

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றானது எதிர்கால சமூகங்களையும் பொருளாதாரத்தையும் பெரிய அளவில் கடுமையாக பாதிக்கும் சக்தியுடையது. எச்.ஐ.வி/எய்ட்ஸ் உலக வரலாற்றில், மனித வள மேம்பாட்டில் மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக ஐ.நா.வளர்ச்சித் திட்ட அமைப்பின் 2005ம் ஆண்டுக்கான மனித வள அறிக்கை கூறுகிறது. 1990லிருந்து 2003 வரையிலான காலகட்டத்தில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் அதிகம் பரவியிருக்கும் நாடுகள், மனித வள மேம்பாட்டுக் குறியீட்டு அட்டவணையில் மிகவும் பின்தங்கி யிருந்தன. இந்த வீழ்ச்சியில், தென்னாப் பிரிக்கா 35 இடங்களுக்கும், ஜிம்பாப்வே 23 இடங்களுக்கும், போட்ஸ்வானா 21 இடங்களுக்கும், சுவாஸிலாந்து 20 இடங்களுக்கும், கென்யா 18 இடங்களுக்கும், ஜாம்பியா 16 இடங்களுக்கும் மற்றும் லிசாதோ 15 இடங்களுக்கும் கீழ் நோக்கித் தள்ளப் பட்டன.

வளர்ச்சியின் பல அம்சங்களை எச்.ஐ.வி/எய்ட்ஸ், பாதிக்கிறது. சராசரி ஆயுள் காலம், தொழில் வளர்ச்சி ஆகியவை இப்பாதிப்புகளில் அடங்கும். இதன் அசுரத்தனமான பாதிப்பே இதனை கட்டுப்படுத்துவதற்கான அவசியத்தை வலியுறுத்தும் காரணியாகும்.

## • மக்கள் மேம்பாட்டில் தாக்கம்

சராசரி ஆயுள் காலத்தை நீட்டிப்பதில் கண்ட முன்னேற்றத்தை பரவியுள்ள பலநாடுகளில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதித்திருக்கிறது. போட்ஸ்வானா நாட்டில் ஆக்க சக்தி கொண்ட ஒரு தலைமுறையையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் செயலிழக்கச் செய்திருக்கிறது. பழைய மதிப்பீடுகளைப் பொய்யாக்கும் வகையில், 2049 வயது வரையிலான நபர்களின் இறப்பு விகிதம் இங்கு அதிகமாக உள்ளது. 19851990 வரையிலான காலத்தில், மொத்த இறப்பில், 2049 வயதினர் 20 சதவீதமே இருந்தனர். ஆனால் தற்போது இது 60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## • வறுமையும் பாகுபாடுகளும்

வறுமையில் வாழும் ஏழைகளையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் அதிகம் பாதிக்கிறது. எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்பால், போட்ஸ் வானாவில் சராசரியாக ஒவ்வொரு வருமானம் ஈட்டுபவரும் அடுத்த 10 ஆண்டுகளில் கூடுதலாக ஒருவரை காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலை உள்ளது. எச்.ஐ.வி/ எய்ட்ஸ் காரணத்தால், மிகவும்

மாத்திரைகளைப் பெற முடிந்தவருக்கு எய்ட்ஸ் இப்போது மரண தண்டனையாக இருக்கவில்லை. ஆட்சியாளர்கள் தான் இனி இதை குணமாக்குவதற்கான விரிவான திட்டங்களை உருவாக்க வேண்டும்.

**பில் கிளிண்டன்,**
முன்னாள் அமெரிக்க அதிபர்



HIV/AIDS
MEDIA MANUAL
India 2007





## எச்.ஐ.வி. மேலாண்மையில் நிறுவனங்களின் பொறுப்பு

எச்.ஐ.வி. அதிகமாகப் பரவியிருக்கும் ஆந்திர பிரதேசத்திலுள்ள சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கம் ஏராளமானவருக்கு வேலை தந்திருக்கும் நிறுவனம். நாட்டிற்கு தேவைப்படும் 10 சதவீத நிலக்கரியை இந்த சுரங்கமே தருகிறது. இதில் 93000 பேர் பணிபுரிகிறார்கள். தனது ஊழியர்களையும் நிறுவன செயல்பாட்டையும் எச்.ஐ.வி. பாதிப்பது குறித்து இந்த நிறுவனம் நன்கு அறிந்திருக்கிறது. நிறுவனம் அமைந்துள்ள இடத்தின் மக்கள் தொகையை விட கூடுதலான எண்ணிக்கையில், அதாவது இதன் ஊழியர்களில் 2 சதவீதம் பேர் எச்.ஐ.வி. வைரஸைப் பெற்றிருக்கிறார்கள். எச்.ஐ.வியின் பாதிப்பால், நிறுவன உற்பத்தியில் ஏற்படும் பாதிப்பு, மருத்துவச் செலவு, காப்பீட்டுச் செலவு மற்றும் ஊழியர் நோய்வாய்ப் படும்போது அல்லது இறக்கும் போது மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கான செலவு ஆகியவற்றை இந்த நிறுவனம் கணக்கிட்டது. எச்.ஐ.வியைத் தொற்றிக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு சிகிச்சை கிடைக்காவிட்டால், 10 ஆண்டுகளில் நிறுவனம் நோயின் பரவுதல் காரணமாக அவர்களுக்கு இழப்பீடாக 21 கோடி அமெரிக்க டாலர்களைச் செலவு செய்ய வேண்டும். மாறாக, ஏ.ஆர்.டி. சிகிச்சையை இவர்களுக்கு நிறுவனமே தரும்போது, பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் பணி புரியும் காலம் அதிகரிக்கிறது. அவர்களது குடும்பத்தைக் காப்பாற்றவும் முடிகிறது. இதனால் நிறுவனம் செலவு செய்யக் கூடிய தொகை 12.4 லட்சம் அமெரிக்க டாலர்கள் தான். மதிப்பீடுகளை அறிந்த பின், நிறுவனம் பல எச்.ஐ.வி. தொற்று தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத் தியுள்ளது. அரசாங்கம், தொழிற்சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு இணைந்து எச்.ஐ.வி. பாதித்திருப்போருக்கான சிகிச்சையையும் ஆதரவையும் தரும் எண்ணற்ற நடவடிக் கைகளை இந்த நிறுவனம் தற்போது திட்டமிட்டு வருகிறது.

- பன்னாட்டு தொழிலாளர் கழகம் (ஐ.எல்.ஓ.), 2005

### • களங்கமும் பாகுபடுத்தி பார்ப்பதும்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் வந்தவர் மேல் சுமத்தப்படும் களங்கமும் வேற்றுமைப் படுத்திப் பார்ப்பதும் இந்தத் தொற்றால் ஏற்படும் மிகக் கொடிய சமூக விளைவாகும். எச்.ஐ.வி தடுப்பு மற்றும் எச்.ஐ.வியைப் பெற்றுள்ள நபர்களிடம் காட்ட வேண்டிய பரிவு மற்றும் ஆதரவு ஆகியவற்றில் இந்த இரண்டும் பெரிய முட்டுக்கட்டைகளாக உள்ளன.

எச்.ஐ.வி. தொடர்பான களங்கம் என்பது இது தொற்றியிருப்பவரிடம் காட்டப்படும் எதிர்மறை மனப்பாங்கைக் குறிக்கிறது. இந்த முட்டுக்கட்டைகள் எச்.வி.ஐயைப் பெறுபவர், குழந்தைகள், அனாதைகள், எச்.ஐ.வி. பெற்றவரின் குடும்பத்தினர் என அனைவரையும் இதற்கு இலக்காக்குகிறது. அறிவுசாராத பாகுபாட்டைக் கடைப்பிடிப்பது, எச்.ஐ.வியைப் பெற்றவராக இருப்பதால் சம்பந்தப் பட்டவரை பிரித்து வைப்பது மற்றும் கட்டுப்பாடுகளை விதிப்பது ஆகியவை வேற்றுமைப்படுத்திப்பார்க்கும் செய்கைகள் என ஐ.நா.எய்ட்ஸ் அமைப்பு தனது வேறுபாடுகளை அறியும் ஆவணத்தில் விவரிக்கிறது. எச்.ஐ.வியைப் பெற்றவர் மீதான களங்கமும் பாகுபடுத்திப் பார்க்கும் வேறுபாடுகளும் உலகெங்கும் காணப் படுகிறது. இடத்திற்கு இடம் இதன் பரிமாணங்கள் மட்டுமே மாறுகின்றன.

### • பொது சுகாதாரம்

எச்.ஐ.வி. அதிக செலவுகளை ஏற்படுத்தும் ஒரு வைரஸ். எச்.ஐ.வி. அதிகம் பரவியுள்ள நாடுகளின் பொது சுகாதார அமைப்புகளை இது பெரிதும் பாதிக்கிறது. இது பல நிலைகளில் நிகழ்கிறது. அடிப்படையில் நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் பிரிவினர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதால், அரசின் நிதி ஆதாரம் சுருங்குகிறது. ஏற்கனவே இருக்கும் சுகாதார அடிப்படை வசதிகள் பெரிதும் பாதிக்கப் படுகின்றன. உபசகாரா ஆப்பிரிக்காவில் உள்ள மருத்துவமனைகளின் பாதிக்கும் மேலான படுக்கைகளில் எச்.ஐ.வி. மற்றும் அது தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டோரே நிரம்பியிருக் கின்றனர்.

## நிர்வகிக்கும் முறை அல்லது கட்டுப்பாட்டு அமைப்பு முறை

### • நிர்வகிப்பு அவசியமா?

நிர்வகிக்கும் முறைக்கும் எச்.ஐ.விக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது ஒரு கேள்வி.

இரண்டையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே தேவையற்றதாக முதலில் தோன்றலாம். என்றாலும் சிறப்பான நிர்வகிப்பு அல்லது கட்டுப்படுத்தும் முறை ஆகியவை வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு மிக இன்றியமையாதது ஆகும்.

இது முறைப்படுத்தப்படாமலிருந்தால் தொற்று பரவுவதற்கு ஏதுவாகி இறப்பு விகிதம் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது.

எச்.ஐ.வி/எய்ட்ஸுக்காக நன்கொடை தரும் நாடுகளும் அமைப்புகளோ, வைரஸ் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு முறையை நிர்வகிக்கும் நிலையைப் பொறுத்தே நிதி வழங்குகின்றன. எவருடைய உதவிக் காகவும் புனரமைப்புக்காகவும் நிதி சென்றடைய வேண்டுமோ அந்த நோக்கம்





நிறைவேறுவதை உறுதி செய்து கொள்ளும் முயற்சியே இது. சமூக அரசியல் செயற்பாங்கை ஆராய உதவும் கருவியாகவும் இது போன்ற எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நிர்வாக விதிகள் உதவுகின்றன.

## • எச்.ஐ.வி. /எய்ட்ஸும் கட்டுப்படுத்தும் முறையும்

தனிநபர்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் பொதுப்படையான நடவடிக்கைகளை செயற்படுத்தும் முறையான மொத்த நடவடிக்கைகளை நிர்வாகமுறை என 1995ம் ஆண்டின் உலக எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நிர்வாகத்திற்கான பொறுப்பான்மைக்குழு வரையறுக்கிறது. பொதுச் செயல்களுக்கான மேலாண்மை என்பது சிறந்த நிர்வகிப்போடு தொடர்புடையது என்பதையே இது குறிக்கிறது.

பெருமளவிலான நாசத்தை எச்.ஐ.வி/ எய்ட்ஸ் ஏற்படுத்துவதால், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை திறம்பட நிர்வகிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சரிவர இதை செயல்படுத்தாவிட்டால் சமூகத்தை இது நாசம் செய்து முன்னேற்றத்தை பாதித்து சராசரி ஆயுள் காலத்தை பெரிதும் குறைத்து விடும். இதற்கான உதாரணமாக பல ஆப்பிரிக்க நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் மோசமான நிர்வகிப்பைக் கூறலாம். மாறாக, உகாண்டா மற்றும் தாய்லாந்தில் தகுந்த திட்டமிடலுடன் இலக்கை அடைய வகுக்கப்பட்ட திட்டங்கள் நன்கு செயல்படுத்தப்பட்டதால், எச்.ஐ.வி/ எய்ட்ஸ் பரவும் வேகம் கட்டுப்பாட்டிலிருக்கிறது.

எச்.ஐ.வி/எய்ட்ஸ் நிர்வகிப்பில் வெற்றியடைய ஐ.நா.வளர்ச்சித் திட்ட அமைப்பின் அலுவலரில் ஒருவரான லீ நாஸூ எளிய வழியை இவ்வாறு கூறுகிறார்.

**முன்னேற்றம் (வளர்ச்சி) + திறம்வாய்ந்த நிர்வகிப்பு முறை = நிலையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட எச்.ஐ.வி. பரவல்**

சமூக பொருளாதார மற்றும் கலாச்சார மாறுபாடுகளை கணக்கில் எடுத்து கொள்ளாவிட்டாலும், இந்த வாதத்தை நியாயப்படுத்தும் உதாரணங்களை அடையாளம் காணுவது கடினமல்ல.

ஒரு அரசானது அந்த நாட்டு மக்களின் வருவாய் மற்றும் பொருளாதாரக் கூறுகளை கவனமாக நிர்வகித்தாலே, எச்.ஐ.வி. பாதிக்கும் வழிமுறைகளை மறைமுகமாகத் தடுக்க முடிகிறது. இதனால், இப்படிப்பட்ட மேம்பட்ட சூழலில் அதன் குடிமகன்கள் தங்களது அன்றாட வாழ்வாதாரங்களைத் தேடிடும் முயற்சிகளில் எச்.ஐ.வி. பெறும் ஆபத்திலிருந்து தப்பிக்க முடிகிறது.

அடிப்படையில் விவசாயப் பணிகளை மட்டுமே அறிந்திருக்கும், வேலை தேடி நகரங்களை நோக்கி நகரத் தொடங்கும் கிராமப்புற மக்கள், அங்கு சென்றவுடன் பொதுவாக பாலியல் தொழிலையே மேற்கொள்கின்றனர். விவசாயமில்லாத போது, மாற்று வேலைகளோ திறன் வளர்க்கும் பயிற்சிகளோ இவர்களுக்குத் தரப்பட்டால், இவர்கள் நகர்ப்புறத்துக்கு குடிபெயரும் அவசியமே நேரிடாது. இது போன்ற மாற்று வேலைகளும் சிறப்புப் பயிற்சிகளும் அடிமட்ட தொழிலாளர்களிடம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றும் ஆபத்தைக் குறைப்பதால் இதுவே சிறந்த நிர்வகிப்பாகக் கருதப்படுகிறது.



islamicate.typepad.com





## • எது சிறந்த நிர்வகிப்பு?

"அனைவரும் பங்கேற்பதாகவும், வெளிப்படையானதாகவும், மக்களின் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் பதிலளிப்பதாகவும் இருப்பதே சிறந்த நிர்வாகம். மேலும் இதுவே பலனளிப் பதாகவும் நேர்மையானதாகவும் அமையும். இது சட்டம் ஆட்சி புரிவதற்கு வகைசெய்யும். சமூக அரசியல் மற்றும் பொருளாதார முன்னுரிமைகள் வரையறுக்கப்படும்போது அது பெரும்பான்மையினரின் பொது இசைவின் அடிப்படையில் அமைவ தாகவும், வளர்ச்சிக்கான கூறுகளை பங்கிடுவதில் ஏழை மக்கள் மற்றும் நலிவடைந்தவரின் குரலை பிரதிபலிப்பதாகவும் இருப்பதை சிறந்த நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்." என ஐ.நா.வளர்ச்சித் திட்ட அமைப்பு யு.என்.டி.பி. கூறுகிறது.




www.tagstudio.net

சிறந்த அரசாங்கம் என்ற கூற்றைத் தாண்டித் தான் சிறந்த நிர்வாகம் அமைகிறது. குடிமக்கள் அரசின் அனைத்து செயல்பாடுகளையும் அறிவது, அரசின் அமைப்புகளை நிர்வகிப்பதில் தெளிவான, முரண்பாடற்ற மற்றும் நியாயமான முறைகளில் பங்கு கொள்வது போன்றவற்றையே சிறந்த நிர்வாகம் குறிக்கிறது. மனித உரிமைகளை மேம்படுத்துவது மற்றும் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் அமைதிக்கு வழிவகுப்பது ஆகியவையும் இதில் அடங்கும். இந்த கூறுகள் அனைத்திலும் தான் சிறந்த நிர்வாகமானது அடங்கியிருக்கிறது.

மாறாக, வலுவில்லாத நிர்வாகம் என்பது ஊழலைக் குறிக்கிறது. பதிலளிக்க வேண்டிய பொறுப்பும் வெளிப்படையான நிர்வாகமும் எங்கு இல்லையோ அங்கு தான் ஊழல் ஊற்றெடுக்கிறது. சிறப்பான நிர்வாகத் துக்குத் தேவைப்படும் அம்சங்களான ஆட்சியில் சட்டத்தின் பங்களிப்பு, சமத்துவம், கடமை, தொலைநோக்குப் பார்வை மற்றும் திறன் ஆகியவை வலுவில்லாத நிர்வாகத்தில் செயலிழந்துவிடும்.

## • சிறந்த நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகள்

**பங்கெடுப்பு:** தங்கள் கருத்தை அரசின் நிர்வாக முடிவுகளில் நேரடியாகவோ அல்லது சட்டபூர்வமான இடையமைப்புகள் மூலமாகவோ ஆண் பெண் இருபாலரும் தங்கள் நலனுக்காக வெளிப்படுத்தும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். இந்த ஆக்க பூர்வமான பங்களிப்புக்கு பேச்சுரிமையும் சுதந்திரமான அமைப்பு செயல்பாடும் உதவும்.

**சட்டத்தின் ஆட்சி:** சட்ட அமைப்பானது சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் மனித உரிமைகளை நிலை நிறுத்துவதில் எந்த பாகுபாடும் இல்லாமல் செயல்படுவதாகவும் இருக்க வேண்டும்.

**வெளிப்படைத் தன்மை:** நம்பகத் தன்மை, தகவல்கள் அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கும்போது உருவாகிறது. சம்பந்தப்பட்ட அமைப்பு மற்றும் நிர்வாக முறைகளுக்கு இவை எளிதாகக் கிடைப்பதாக இருக்க வேண்டும். தகவல்கள் முழுமையாக புரிந்து கொள்வதாகவும் கண்காணிக்க ஏதுவானதாகவும் இருப்பதும் அவசியம்.

**பொறுப்பு:** அமைப்புகளும் நிர்வாக முறைகளும் யாருக்காக செயல்பட ஏற்படுத்தப்பட்டனவோ அதை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்.

**பொது உடன்பாடு:** பல்வேறு நோக்கங்களைக் கொண்டு இயங்கும் குழுக்களை அனைவருக்கும் பொதுவான நோக்கத்திற்காக செயல்படும்படியான இணக்கத்தை ஏற்படுத்துவதே சிறந்த நிர்வகிப்பாகும். கொள்கைகள் மற்றும் செயல்முறைகளிலும் இணக்கத்தை தேவையானபோது ஏற்படுத்துவதும் அவசியம்.

**சமசீர் தன்மை:** வாழ்வு மற்றும் அதன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை அனைத்து ஆண் பெண்களும் பெற வேண்டும்.

**முனைப்பும் செயல் திறனும்:** தேவைகளை நிறைவு செய்யும் வகையில்,

ஆப்பிரிக்காவைப் போல இந்தியாவில் எய்ட்ஸ் பரவி, பேரழிவை ஏற்படுத்திடாமல் தடுத்திடும் வாய்ப்பு நமக்கு இன்னமும் இருக்கிறது.

**— முன்னாள் பிரதமர்**
அடல் பிகாரி வாஜ்பாய்





இருக்கும் மூலாதாரங்களை சீரிய முறையில் பலனளிக்கும் முயற்சிகளில் அமைப்புகளும் நிர்வாக முறைகளும் ஈடுபட வேண்டும்.

**நிர்வாக பதிலளிக்கும் பொறுப்பு:** அரசு மற்றும் தனியார் துறைகள், சமூகப் பொறுப்புள்ள நிறுவனங்கள் இவற்றில் முடிவுகளை எடுக்கும் நிர்வாகிகள் பொதுமக்களுக்கும் பல்வேறு நிறுவனங்களின் பங்குதாரருக்கும் பதிலளிக்கும் கடமையைப் பெற்றுள்ளனர். இந்த பதிலளிக்கும் கடமையானது, நிறுவனத்திற்குள் அல்லது அதன் வெளியே, இந்த முடிவுகள் ஏற்படுத்தும் பாதிப்பைப் பொறுத்து மாறுபடுகிறது.

தடுப்பு திட்டமானது, உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்படும் சிறந்த குறிப்பிடத்தக்க சில பொதுவான கூறுகளை கொண்டுள்ளன.

- அரசியல் அமைப்பின் உயர்நிலைகளில், வைரஸ் பரவுதலைத் தடுப்பதில் உறுதியான அர்ப்பணிப்பு உணர்வு. தொற்றுக்கெதிரான கொள்கைகளையும் நிதியையும் இதுவே உறுதி செய்கிறது.
- நோய் தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான சேவை ஆகியவற்றில் பல்வேறு துறைகளின் அணுகுமுறையை தன்னிலையிலும் பல்வேறு அமைச்சகங்களின் மூலமாகவும் ஒரே விதமாக இருக்கும்படி அரசாங்கம் ஈடுபடுவது




www.acmeme.org

**திட்டமிட்ட தொலை நோக்குப் பார்வை :** சிறந்த நிர்வகிப்பையும் மனித வள மேம்பாட்டையும் தருவதற்காக பரந்த மற்றும் தொலை நோக்குப் பார்வையை தலைவர்களும் மக்களும் பெற்றிருக்க வேண்டும். அந்தத் தொலை நோக்குப் பார்வையானது வரலாறு, கலாச்சாரம் மற்றும் சமூக முரண்களையும் அறிந்து கொண்டதன் அடிப்படையில் இருக்க வேண்டும்.

## செயல்பாட்டில் சிறந்த நிர்வாகம்

சில நாடுகள் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுதலை தடுப்பதற்கான வெற்றிகரமான நிர்வாகக் கூறுகளை தங்களது திட்டங்களில் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகள் அனைத்திலும் கடைப் பிடிக்கப்படும் தேசிய எய்ட்ஸ்

- பல்வேறு நிலைகளில் பங்களிப்பு (தேசிய, மாநில, மாவட்ட மற்றும் சமூகக் குழு அளவிலான நிலைகளில்)
- வைரஸ் பரவல் மற்றும் தொற்றுக்கு ஆளாகும் நடவடிக்கைகள் ஆகியவற்றை கண்காணிப்பதுடன் இதனால் பெறப்படும் தகவல்களைக் கொண்டு வைரஸுக்கெதிரான கொள்கைகள் மற்றும் திட்டங்களை மேம்படுத்துவது, தொடர்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகள்
- ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், வைரஸ் தொற்றிக் கொள்ளும் வாய்ப்புள்ளவரையும் பொதுமக்களையும் காக்கும் முயற்சிகள்
- எச்.ஐ.வி/எய்ட்ஸுக்கெதிரான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது
- ஒருங்கிணைந்த நோய் தடுப்பு மற்றும் ஆதரவு தரும் செயல்பாடுகள்.